## குடிநீர், நீர் அகற்றம் மற்றும் சுகாதாரம்

பேரிடர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நீர் மூலம் பரவும் தொற்று நோய்கள் தாக்கா வண்ணம், சுத்தமான குடிநீர் வழங்குதல் என்பது மிகவும் முக்கியமானதாகும். நாளொன்றுக்கு ஒரு நபருக்க குறைந்தது 3 லிட்டர் குடிநீர் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்துள்ளது.

முகாம்களில் தங்கும் ஆண், பெண் மற்றும் சிறார்களுக்கு சுகாதாரம் மற்றும் தனிநபர் சுதந்திரம் ஆகியவை காக்கப்படுவது என்பது அரசுக்கு மிகப்பெரிய சவாலாகும். தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய வழிகாட்டுதலின் படி குறைந்த பட்ச தர அளவுகளின்படி சுகாதாரம் பேணப்பட்டு வருகிறது.

சுகாதாரம் தொடர்பாக பின்வரும் நடைமுறைகள் நிவாரண முகாம்களில் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன

- 30 நபர்களுக்கு 1 கழிவறை
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தனித்தனியே கழிவறை வசதி

- 30 நபர்களுக்கு 1 கழிவறை
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு தனித்தனியே கழிவறை வசதி
- கழிவறை மற்றும் குளியல் பயன்பட்டுக்கு நபர்
- நபர் ஒருவருக்கு நாலென்றுக்கு சுகாதாரத்திற்காக 15 லிட்டர் நீர் வசதி செய்து தரப்படல்
- பெண்களுக்கு சானிடரி நாப்கின்கள் வழங்குதல்
- முகாம்களை தூய்மையாக வைத்திருக்க ஏதுவாக திடக்கழிவுகளை முறையாக அகற்ற தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல்

## நிவாரண போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மை

தயார் நிலையில் இருத்தலின் ஓர் அங்கமாக தமிழ்நாடு குடிமைப்பொருள் வழங்கல் கழகம் (TNCSC) மூலம் இரண்டு மாதங்களுக்கு தேவையான நிவாரண பொருட்களை பாதிப்பு / மிக பாதிப்பு ஏற்படக்கூடிய இடங்களுக்கு மன்னதாகவே கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

### உடல்நலம் மற்றும் மனநலம் பாதுகாப்பு

பேரிடரால் பாதிக்கப்பட்ட கர்ப்பணி பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், பிறந்த குழந்தைகள், முதியோர் மற்றும் கடும் நோய்களால் பாதிக்கப்பட்டோர் ஆகியரது உடல்நலன் மேலும் பாதிக்காத வகையில் அவர்களை காக்க தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. மேற் கூறிய வழிகாட்டுதல்களை தவறாது கடைபிடிக்க மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பபட்டுள்ளனர்.

### அவசரக்கால ஆயத்த நிலை மற்றும் உடல்நலம் பேணல்

- நடமாடும் மருத்துவ குழுக்கள் மூலம் முகாம்களில் உள்ள மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தொற்று நோய்கள் பரவா வண்ணம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.
- கருவுற்ற பெண்களுக்கு சுகப்பிரசவம் ஏற்பட தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு உள்ளன.
- மருத்துவர்கள் / மருத்துவ உதவியாளர்கள் / தனியார் மருத்துவமனைகள் மூலம்

- மருத்துவர்கள் / மருத்துவ உதவியாளர்கள் / தனியார் மருத்துவமனைகள் மூலம் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தகுந்த சிகிச்சை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- மேல்சிகிச்சை தேவைப்படும் நபர்களுக்கு உரிய சிகிச்சை அளித்திட மருத்துவமனைகளுக்கு அழைத்து செல்ல தகுந்த போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

சமூக நலத்துறை மற்றும் மனநலன் ஆணைய தொழில்நுட்ப வல்லுநர் குழு உதவியுடன் (ஞடிளவ கூசயரஅயவiஉ ளுவசநளள னுளைடிசனநச) -ஆல் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கப்படும். சுனாமி பேரழிவுக்கு பின்னர் மேற்படி சிகிச்கைகள் வழங்குவதில் சிறப்பாக செயல்பட்டு வருவது தெரிய வருகிறது.

## விதவைகள் மற்றும் அனாதைகளுக்கான நிவாரணம்

- குடும்பத்தில் இருந்து தனியே பிரிந்து வாழும் விதவைகள் மற்றும் அனாதை பிள்ளைகள் மீது தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.
- பேரிடர் தாக்கம் காரணமாக கணவரை இழந்த விதவைகளுக்கு 15 தினங்களில் விதவை சான்று வழங்கப்படுகிறது. மேலும். பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும் 15 தினங்களில் தேவையான சான்றுகள் வழங்கப்படுகின்றன.
- தமிழக அரசின் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி அனாதை குழந்தைகளுக்கான நிவாரணங்கள் முறையாக வழங்கப்படுகின்றன.
- அரசாணை நிலை எண். 380 வருவாய்த் துறை நாள்: 27.10.15-ல் தெரிவித்துள்ளபடி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கும், வீடு இழந்தவர்களுக்கும் உரிய இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன.

**கால்நடை பாதுகாப்பு**

பேரிடரால் பாதிக்கப்படும் / பாதிக்கப்படக்கூடிய கால்நடைகள் மற்றும் வன விலங்குகளுக்கு பாதுகாப்பான புகலிடம் அளிப்பது மிகவும் முக்கியமானதாகும். கால்நடை தீவனம் இருப்பு, கால்நடை மருந்துகள் இருப்பு வைப்பு தொடர்பாக இணை / துணை இயக்குநர்கள், கால்நடைத்துறை அலுவலர்களுக்கு உரிய அறிவுரை வழங்க மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கால்நடை தீவன இருப்பு தொடர்பாக தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. எதிர் வரும் பருவகாலத்தை எண்ணத்தில் கொண்டு தேவையான இடங்களுக்கு முன்கூட்டியே கால்நடை தீவனங்கள் கொண்டு செல்லப்பட்டு இருப்பு வைக்கப்படுகின்றன.

**மீட்பு மற்றும் மறுவாழ்வு**

(அ) மனம் சார்ந்த - சமூக உதவிகள்

பேரிடர் எதிர்கொள்ளுதல் நிதழ்வு தொடங்கியவுடனேயே, மீட்பு நடவடிக்கைகள் பின்வரும் விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- பேரிடரால் இருப்பிடம் இழந்தவர்களுக்கு உடனடியாக மாற்று தற்காலிக குடியிருப்புகள் ஏற்படுத்தி தருதல்.
- விதிகளில் தெரிவித்துள்ளபடி நிவாரண உதவிகள் வழங்குதல்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு மனநல ஆலோசனை வழங்குதல்
- பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ உதவிகள் அளித்தல்.
- சமுதாய பங்களிப்புடன், தொழில்நுட்ப உதவியுடன் சேர்ந்த பாதுகாப்பான மறுகட்டமைப்பு வசதிகள் செய்து தருதல்.

தமிழக அரசு மற்றும் சமூக நலத்துறையும் சேர்ந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ மற்றும் மனநல ஆலோசனைகளை வழங்கும். 2004 சுனாமி பேரிடரின் போது மனநல ஆலோசனை மையங்கள் பாதிக்கப்பட்ட கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டன.